மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் புதிய ஒரு திட்டத்தைச் சொல்கிறார்கள். இப்படி வேறு மாநிலங்களில் இருக்கிறதா என்பதைப்பற்றி விசாரிக்கச் சொல்லி இருக்கிறோம். தகவல் கிடைத்த பிறகு அதைப்பற்றி அரசு யோசிக்கும்.

திரு. த. சோனையா: தமிழகத்தில் பொதுப்பணித் துறையில் அதிகமாக நிறைய கட்டடங்கள் கட்டுவதற்கு பெரிய தொகை போட்டு செலவிடப்படுகிறது. அதனால் அதற்கென்று ஒரு தனி வாரியம் ஏற்படுத்தினால் காரியங்கள் சுமுகமாக நடைபெறுவதற்கு ஏதுவாக இருக்கும். அதைச் செய்வதற்கு அரசு ஏதாவது குறிப்பு வைத்திருக்கிறதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: இந்தக் கேள்வி கட்டடம் கட்டுகிற பொருள்களுக்கான வாரியம் பற்றியது. அங்கத்தினர் குறிப்பிடுவது கட்டடம் கட்டுவதற்கான வாரியம். இதற்கும் அதற்கும் சம்பந்தம் இல்லை.

புதுப்பட்டிக்கு பாசனக் கண்மாய்

*396 வினா—**திரு. சோ. அழகர்சாமி:** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், விளாத்திகுளம் ஒன்றியத்தைச் சேர்ந்த டி. புதுப்பட்டியில் ஓர் பாசனக் கண்மாய் அமைக்க அரசு திட்டமிட்டுள்ளதா?

(இ) ஆம் எனில், எப்போது வேலை ஆரம்பிக்கப்படும்?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) இத் திட்டத்திற்கான ரூ. 7.33 லட்சங்கள் மதிப்பீடு பாசனத் தலைமைப்பொறியாளரால் உணவு உற்பத்தி வருவாய் வாரியத்தின் மூலமாக அரசுக்கு அனுப்பப்பட்டு வருவாய் வாரியத்தின் பரிசீலனையில் உள்ளது.

(இ) வருவாய் வாரியத்தின் பரிந்துரை கிடைத்த பிறகு மதிப்பீட்டிற்கு அரசு ஒப்புதல் அளித்த பிறகுதான் இதற்கான வேலைகள் ஆரம்பிக்கப்பட வேண்டும்

1973 நவம்பர் 26]

திரு. சோ. அழகர்சாமி : இந்தத் திட்டத்தைத் துவக்க வேண்டுமென்று ஆரம்ப நடவடிக்கை எடுத்து நீண்ட நாட்கள் ஆகிவிட்டன. அது ஒரு பெரிய வரட்சி ஏரியா—டிரை ஏரியாவாக இருப்பதினால், கொஞ்சம் துரிதப்படுத்தி, வேலையைச் சீக்கிரம் ஆரம்பிப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அரசு எடுக்குமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : வருவாய் வாரியத்திடமிருந்து அறிக்கை கிடைத்தவுடன் அரசு அதன் மீது முடிவு எடுத்து வேலை துவங்கும்.

கருப்பா நதித் திட்டப் பணிகள்

* 397 **வினா—திரு. ச. சங்குமுத்து தேவர் :** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், கருப்பா நதித் திட்டத்தில் பொதுப்பணித் துறைக்குச் சொந்தமான பெரிய இயந்திரங்களை வைத்து வேலை நடந்தாலும், தனிப்பட்ட நபர்களுக்குச் சொந்தமான லாரி மூலம் மண் வேலைகள் செய்யப்படுகிறதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) & (இ) திட்டத்தில் மண் எடுக்கும் இடங்களில் பெரிய பாறைகள் பரவலாகக் கிடப்பதனால் அங்கு அரசுக்குச் சொந்தமான மண் எடுத்துச் செல்லும் இயந்திரங்களை உபயோகப்படுத்துவது சிக்கனமில்லாததும் கடினமானதுமாகும். ஆகவே, இந்த இடங்களில் ஆட்களை வைத்துத்தான் மண்ணை வெட்டி எடுக்க முடியும். அவ்வாறே செய்யவும் பட்டன. ஆகையால் இடத்தின் நிலவரத்தைக் கருத்தில் கொண்டு லாரிகள் மூலம் மண் கொண்டு செல்லப்பட்டு மண் அணை கட்டப்படுகிறது. பொதுப்பணித் துறைக்குச் சொந்தமான நான்கு 'டிப்பர்கள்' நான்கு லாரிகள் உள்ளன. இத் திட்டத்தில் பணியாற்றும் ஒப்பந்தக்காரர்களுக்குப் பொதுப்பணித் துறை வேலைகள் செய்வதற்கு இவை வாடகைக்கு விடப்படுகின்றன. இவற்றைத் தவிர இப்போது இத் திட்டத்தில் தனி நபர்களுக்குச் சொந்தமான பத்து லாரிகளும் வேலை செய்து வருகின்றன.